# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயம்

**வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலினால் பலிக்குட்படுத்தப் பட்டோருக்கான நீதியையும் செப்பனீட்டையும் பெறுதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சர் அவர்களால் 2017, மாச்சு மாதம் 07 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***167 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 16.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

2-PL 005070 -475 (2017/03)

**வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலி லிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயம்**

*ச.வ.ஓ. 9/2016*

**வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; வலுக் கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலினால் பலிக்குட்படுத்தப்பட்டோருக்கான நீதியையும் செப்பனீட்டையும் பெறுதற்கான உரிமையை உறுதிப் படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

(இதனகத்துப்பின்னர் ''சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத் துக்கு இலங்கை 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் தேதியன்று கையொப்பமிடுநரொருவராக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆந் தேதியதும் 2016ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திடம் வைப்பிலிடப்பட்டதுமான தீர்மானமுறுதியாக்கற் சாதனமொன்றின் மூலம் இலங்கை மேற் கூறப்பட்ட சமவாயத்தைத் தீர்மானமுறுதியாக்கஞ் செய்துள்ள தாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயம் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் தேதியன்று இலங்கை தொடர்பில் வலுவுக்கு வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்தின்கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் சட்டவாக்க ஏற்பாட்டைச் செய்வது அவசியமானதாக வந்துள்ளதாதலாலும்:

2-PL 005070 -350 (2017/03)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சான்றுப்படுத்துகைத் தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

சமவாய அரசுகள்.

**2.** அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், சமவாயத்துக்கான திறத்தவர்களாகவுள்ள அரசுகளைச் சான்றுப்படுத்தலாம். எந்த அரசுதொடர்பில் இப்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த அரசு இதனகத்துப்பின்னர் "ஒரு சமவாய அரசு" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

வலுக் கட்டாயமாகக் காணாமற் போக்கப்படுதல் முதலியன.

**3.** (1) பகிரங்க அலுவலராகவிருக்கின்ற அல்லது அலுவலக முறையான பதவியில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், அல்லது அரசின் அதிகாரவளிப்புடன், ஆதரவுடன் அல்லது இசைவுடன் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் -

(அ) வேறெவரேனுமாளைக் கைது செய்தால், தடுத்துவைத்தால், தவறானமுறையில் அடைத்து வைத்தால், ஆட்கவர்ந்தால், ஆட்கடத்தினால் அல்லது அத்தகைய ஆளின் சுதந்திரத்தை வேறெவ்வகையிலும் இழப்பிக்கச் செய்தால்; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய கைதுசெய்தலை, தடுத்துவைத்தலை, தவறான முறையில் அடைத்து வைத்தலை, ஆட்கவர்தலை, ஆட்கடத்தலை அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்படுதலை ஒப்புக்கொள்வ தற்கு மறுத்தால்; அல்லது

(ii) அத்தகைய வேறு ஆளின் கதியை மறைத்து வைத்தால்; அல்லது

(iii) அத்தகைய வேறு ஆளின் அடுத்துப்பின்னரான அல்லது தற்போதைய இருக்குமிடத்தை வெளிவிடுவதற்குத் தவறினால் அல்லது மறுத்தால் அல்லது செல்லுபடியான சாக்கின்றி வெளிவிடுவதற்கு இயலாதிருந்தால்,

அவர் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின்பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், பலிக்குட்பட்டவரொருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத நட்டஈடு செலுத்துவதற்கு மேலும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) வேறெவரேனுமாளை தவறானமுறையில் அடைத்து வைக்கின்ற, ஆட்கவர்கின்ற, ஆட்கடத்துகின்ற அல்லது அத்தகைய ஆளின் சுதந்திரத்தை வேறெவ்வகையிலும் இழப்பிக்கச் செய்கின்ற; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய தவறான அடைத்து வைத்தலை, ஆட்கவர்தலை, ஆட்கடத்தலை அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்படுதலை ஒப்புக்கொள்ள மறுக்கின்ற; அல்லது

(ii) அத்தகைய வேறு ஆளின் கதியை மறைத்து வைக்கின்ற; அல்லது

(iii) அத்தகைய வேறு ஆளின் அடுத்துப்பின்னரான அல்லது தற்போதைய இருக்கு

மிடத்தை வெளிவிடுவதற்குத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது செல்லுபடியான சாக்கின்றி வெளிவிடுவதற்கு இயலாதிருக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், பலிக்குட்பட்டவரொருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத நட்டஈடு செலுத்துவதற்கு மேலும் ஆளாதலும் வேண்டும்.

(3) (அ) ஒரு மேலதிகாரியின் பயனுறு அதிகாரத்தின் கீழான மற்றும் கட்டுப்பாட்டின் கீழான கீழ்நிலை அலுவலர்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிந்துகொண்டிருந்ததாக அல்லது புரியப்போவதாக இருந்ததாகத் தெளிவாகச் சுட்டிக்காட்டிய தகவலை அறிந்திருக்கின்ற அல்லது மனதறிய அதற்குப் பாராமுகமாகவிருக்கின்ற;

(ஆ) வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்ற தவறுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கான பயனுறு பொறுப்பையும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கின்ற; அத்துடன்

(இ) (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்று புரியப்படுவதைத் தடுப்பதற்கு அல்லது அடக்கியொடுக்குவதற்கு அல்லது புலனாய்வுக்கும் குற்றவழக்குத் தொடுத்தலுக்கும் சட்ட வலுவுறுத்தல்

அதிகாரியிடம் அக்கருமத்தைச் சமர்ப்பிப்பதற்கு அவரது தத்துவத்தினுள்ளான அவசியமான மற்றும் நியாயமான வழிமுறைகளை எடுப்ப தற்குத் தவறுகின்ற,

அந்த மேலதிகாரி, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், பலிக்குட்பட்டவரொருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத நட்டஈடு செலுத்துவதற்கு மேலும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தவறானமுறையில் அடைத்துவைத்தல்", "ஆட்கடத்தல்" மற்றும் "ஆட்கவர்தல்" என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் 331, 350, 351, 352 மற்றும் 353 என்னும் பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளன.

உதவுதல், உடந்தையளித்தல், எத்தனித்தல் மற்றும் சதி செய்தல்.

**4.** (1) மூன்றாம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற அல்லது 3 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறைப் புரிவதற்குச் சதி செய்கின்ற அல்லது எத்தனிக்கின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், பலிக்குட்பட்டவரொருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத நட்டஈடு செலுத்துவதற்கு மேலும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவில் ‘‘உடந்தை’’ மற்றும் ‘‘சதி’’ என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் 100, 101, மற்றும் 113அ என்னும் பிரிவுகளிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டுள்ளன.

பிடியாணையின்றிக் கைதுசெய்தகு மற்றும் பிணையில் விடத்தகாத தவறு.

**5**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காவும், இச்சட்டத்தின்கீழான தவறொவ்வொன்றும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகவும் பிணையில் விடத்தகாத தவறொன்றாகவும் இருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளை மேல் நீதிமன்றம் விளங்குதலும், தண்டங்களும்.

**6**. (1) கொழும்பில் நடைபெறும் இலங்கையின் மேல் நீதிமன்றம், அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளை விளங்குவதற்குப் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாகவமைகின்ற செயலொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மேல் நீதிமன்றம், இலங்கையினுள் புரியப்பட்டது என்றாற்போன்று அத்தகைய தவறுகளை விளங்க நியாயாதிக்கம் கொண்டதாதல் வேண்டும் -

(அ) தவறாளர், அவர் இலங்கைப் பிரசையாக இருப்பினுஞ் சரி அல்லவாயினுஞ்சரி, இலங்கையின் நியாயாதிக்கத்தின் கீழுள்ள ஏதேனும் ஆள்புலத்தில் இருப்பின்;

(ஆ) தவறைப் புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆள் இலங்கைப் பிரசையாக, அல்லது சமவாயத்துக்குத் திறத்தவரொருவராகவுள்ள வேறோர் அரசின் நாட்டினத்தவராகவிருப்பின், அல்லது அவரது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டுள்ள நாடற்ற ஆளொருவராகவிருப்பின்; அல்லது

(இ) அத்தகைய செயல், -

(i) இலங்கைக் கொடியைப் பறக்கவிட்டிருக்கும் கப்பலுக்கெதிராக அல்லது அதன்மீது, அல்லது

(ii) தவறு புரியப்படும் நேரத்தில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திக்கெதிராக அல்லது அதன்மீது

புரியப்படின்; அல்லது

(ஈ) எவ்வாள் தொடர்பாகத் தவறு புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ அவ்வாள் இலங்கைப் பிரசையாகவிருப்பின்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காகக் கைது செய்யப்பட்ட குறித்தசில ஆட்களின் உரிமைகள்.

**7.** இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காகக் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அவர் எந்த அரசின் நாட்டினத்தவராக உள்ளாரோ அந்த அரசின் அல்லது அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேறுவகையில் உரித்துள்ள அரசின் மிக அண்மித்த தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராகவிருப்பின், அவர் எந்த அரசின் ஆள்புலத்தில் வழமையாக வதிந்தாரோ அந்த ஆள்புலத்திலுள்ள அரசின் மிக அண்மித்த தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கும்; அத்துடன்

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவரால் பார்வையிடப்படுவதற்கும்; அத்துடன்

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) வின் கீழான அவரது உரிமைகள் பற்றி அறிவிக்கப்படுவதற்கும்.

*எந்த ஆட்களை ஒப்படைப்ப தற்காக வேண்டுகோள் விடுக்கப் படுகின்றதோ அந்த ஆட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றி வேண்டு கோள்விடுக்கும் அரசுக்கு அமைச்சர் அறிவித்தல்.*

**8**. மூன்றாம் அல்லது 4 ஆம் பிரிவின்கீழான தவறொன் றுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீளஒப்படைப்பதற்காக, ஒரு சமவாய அரசின் அரசாங்கத்தால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங் கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்ச ரானவர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காக அல்லது அவரை மீள ஒப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள வழிமுறை கள் பற்றி வேண்டுகோள்விடுக்கும் அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*சமவாய அரசுகளுக்கான உதவி.*

**9**. (1) மூன்றாம் அல்லது 4 ஆம் பிரிவின்கீழான தவறொன் றைப் புலனாய்வு செய்வதற்கும் அதற்காகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் அவசியமாகுமிடத்தெல்லாம், 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கை அரசாங்கத்துக்கும், ஒன்றில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநல வரசு நாடுகளாகவுள்ள, அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடுகளல்லாத நாடுகளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்தப் பொதுநலவரசு நாடுகளாகவுள்ள ஏனைய அரசுகளுக்கும் இடையே உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடொன்றாகவிராத நாடொன்றின் அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்த நாட்டுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்தப் பொதுநலவரசு நாடாகவிராக நாடொன்றின் விடயத்தில், அப்போது, அரசாங்கமானது, சமவாயத்தின்கீழான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அளவுக்கு (சான்றையும் கூற்றுக்களையம் எடுத்தல், மன்றாணை சேர்ப்பித்தல் மற்றும் தேடுகைகளை நடாத்துதல் தொடர்பான உதவி உள்ளடங்கலாக), சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம்

பிரிவின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும் அதற்காகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் அவசியமாகவிருக்கக் கூடியவாறாகச் சமவாய நாடொன்றுக்கு அத்தகைய எல்லா உதவிகளையும் அளிக்கலாமென்பதுடன், அமைச்சரினூடாக அத்தகைய சமவாய நாட்டிடமிருந்து அத்தகைய எல்லா உதவிகளையும் கோரலாம்.

(3) ஒரு சமவாய நாட்டுக்கு உதவியளித்தலானது, அமைச்சர் தகுதியானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையச் செய்யப்படலாம்.

*சமவாய அரசுகளுடன் உளதாம் மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடுகள், தவறுகளாக ஏற்பாடு செய்வதாகக் கருதப்படுதல்.*

**10.** இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று ஏதேனும் சமவாய அரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்று உள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலங்கைக்கும் குறித்த சில சமவாய அரசுகளுக்கும் இடையேயான மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடாகச் சமவாயத்தை அமைச்சர் கொள்ளலாம்.*

**11.** ஏதேனும் சமவாய அரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடெதுவும் இல்லாதவிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்பதற்காக ஏற்பாடு செய்கின்றதும் இலங்கை அரசாங்கத்தினால் சமவாய அரசுடன் செய்துகொள்ளப்பட்டதுமான மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்றாகச் சமவாயத்தைக் கொள்ளலாம்.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்துக்கான திருத்தம்.*

**12.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம், அச்சட்டத்துக்கான அட்டவணையில், அவ்வட்டவணையின் பாகம் ஆ வுக்கு நேர்முன்னர் காணப்படுகின்ற விடயங்களின் 37 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(37அ) 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டத்தின் நோக்கெல்லையினுள்ளான தவறொன்று.".

*இச்சட்டத்தின் கீழான தவறுகள் மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசியல் தவறுகளாக இராதிருத்தல்.*

**13.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்துக்கான அட்டவணையிலும் இச்சட்டத்திலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கை அரசாங்கத்துக்கும் ஏதேனும் சமவாய அரசுக்கும் இடையேயாக, அத்தகைய ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீள ஒப்படைக்கும், அல்லது இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சமவாய அரசொன்றுக்கு உதவியளிக்கும் நோக்கங்களுக்காக மட்டும், அரசியல் குணநலன்கொண்ட தவறொன்றாக அல்லது அரசியல் தவறொன்றுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக அல்லது அரசியல் உள்நோக்கங்களினால் உந்தப்பட்ட தவறொன்றாக இராதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுடன் சம்பந்தப் படுத்தி நோக்குகையில் பலிக்குட் படுத்தப்பட் டோரினதும் உறவினர் களினதும் உரிமைகள்.*

**14.** (1) பலிக்குட்படுத்தப்பட்டவர் ஒவ்வொருவரும் மற்றும் பலிக்குட்படுத்தப்பட்டவரின் உறவினர் ஒவ்வொருவரும், வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலின் சூழ்நிலைகள் தொடர்பான உண்மையையும், சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளினால் நிறைவேற்றப்படுகின்றவாறான புலனாய்வின் முன்னேற்றமும் பெறுபேறுகளும் பற்றிய உண்மையையும், காணாமற்போக்கப்பட்ட ஆளின் கதிபற்றிய உண்மையையும் அறிந்துகொள்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பலிக்குட்படுத்தப்பட்டவர் ஒவ்வொருவரும் மற்றும் பலிக்குட்படுத்தப்பட்டவரின் உறவினர் ஒவ்வொருவரும், சட்டத்தினால் இடப்பட்ட மட்டுப்பாடுகளுக்கமைய, 3 ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்ட தவறுகளின் சூழ்நிலைகளையும் காணாமற்போக்கப்பட்ட ஆட்களின் கதியையும் நிலைநாட்டுவதற்கான எத்தனிப்பு

டன் தொடர்புபட்ட ஒழுங்கமைப்புக்களையும் கழகங்களையும் அமைப்பதற்கும், அவற்றில் சுதந்திரமாகப் பங்குபற்றுவதற்குமான உரிமையையும் 3 ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்ட தவறுகளின் பலிக்குட்படுத்தப்பட்டோருக்கு உதவுவதற்கான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆளொருவர் 3 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகள், விதிமுறைப்பட்ட முறைப்பாடெதுவும் இராதிருப்பினுங்கூட, புலனாய்வொன்றைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

(4) சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகள், காணாமற்போக்கப்பட்ட ஆளைத் தேடுவதற்கும் அவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்கும் இரகசியத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய ஆளை விடுவிக்கச்செய்வதற்கும் அத்துடன் மரணம் ஏற்பட்டுள்ள பட்சத்தில், அத்தகைய ஆள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அவருக்கு மரியாதை செலுத்தி, அவரின் எச்சங்களைத் திருப்பி ஒப்படைப்பதற்கும் தோதான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

சுதந்திரம் இழப்பிக்கப் படுதல் சம்பந்தமான கடப்பாடுகள்.

**15.** (1) ஆளொருவர் இரகசியத்தடுப்பில் வைத்திருக்கப்படுதலாகாது.

(2) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எவரேனுமாள், எழுத்திலான சட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு மட்டும் அமைய, அவரது உறவினர்கள், சட்டத்தரணி அல்லது அவர் விரும்பிய வேறெவரேனும் ஆள் என்போருடன் தொடர்புகொள்வதற்கும் அவர்களினால் பார்வையிடப்படுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(3) சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆட்கள் உள்ள இடங்களுக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகள், சுதந்திரம் இழப்பிக்கப் பட்ட ஆட்கள் பற்றிய நாளதுவரையாக்கப்பட்ட அலுவலகமுறை யான இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் தொகுக்கப்படுவ தனையும் பேணப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்; சட்டத்தினால் அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் நீதிமுறை அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிறுவனத்துக்கு, கோரிக்கையின் மீது அவை உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டுமென்ப துடன், பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் அடையாளம்;

(ஆ) அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட தேதியும், நேரமும், இடமும், அவ்வாளின் சுதந்திரத்தை இழப்பித்த அதிகாரியின் அடையாளமும்;

(இ) சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட அதிகாரியும் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமைக்கான ஏதுக்களும்;

(ஈ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி;

(உ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்குச் சேர்க்கப்பட்ட தேதியும், நேரமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்;

(ஊ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடனல நிலைமை தொடர்பான தகவல்;

(எ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்துக்கான சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்; அத்துடன்

(ஏ) விடுவிக்கப்பட்ட அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட வேறோர் இடத்துக்கு இடமாற்றப்பட்ட தேதியும் நேரமும், ஆளொருவர் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எந்த இடத்துக்கு இடமாற்றப்படுகின்றாரோ அந்தச் சேரிடமும், இடமாற்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்.

*உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணி களின் உரிமைகள்.*

**16.** (1) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவரின் எவரேனும் உறவினர், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவரின் பிரதிநிதி அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவரின் சட்டத் தரணி, பின்வரும் தகவல்களுக்கு அணுக்கத்துக்கான உரிமை யைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட ஆள் அல்லது அதிகாரி;

(ஆ) அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டு, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்கு அவர் சேர்க்கப்பட்ட தேதியும், நேரமும், இடமும்;

(இ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி;

(ஈ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட வேறோர் இடத்துக்கு இடமாற்றப்படும் பட்சத்தில், சேரிடமும் இடமாற்றத் துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும் உட்பட, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆள் இருக்குமிடமும்;

(உ) விடுவிக்கப்பட்ட தேதியும், நேரமும், இடமும்;

(ஊ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடனல நிலைமை தொடர்பான தகவல்; அத்துடன்

(எ) சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்தின் சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள் மற்றும் புலனாய்வில் பங்குபற்றுகின்ற ஆட்கள், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவர் சம்பந்தமான தகவலைத் தேடுவதன்விளைவாக ஏதேனும் இழிவான நடாத்துகை, அச்சுறுத்தல் அல்லது அழுத்தம் என்பவற்றிற்கெதிராகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆளொருவரின் சுதந்திரம் இழப்பிக்கப்படுவதன் சட்டமுறையான தன்மையைக் கவனத்துட்கொள்வதற்குப் பங்கமின்றி, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களைத் தாமதமின்றிப் பெறுகின்ற வழிவகையாக உடனடியான மற்றும் பயனுள்ள நீதிமுறைப் பரிகரிப்புக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பரிகரிப்புக்கான அத்தகைய உரிமை எச்சூழ்நிலைகளிலும் இடைநிறுத்தப்படுதலோ அல்லது மட்டுப்படுத்தப்படுதலோ ஆகாது.

புலனாய்வுகளுடன் தலையிடுதல் மற்றும் அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துதல் அத்துடன் தகவல்களைப் பதிவதற்குத் தவறுதல் அல்லது வழங்குவதற்கு மறுத்தல்.

**17.** (1) (அ) புலனாய்வொன்று நடாத்தப்படுவதில் தலையிடுகின்றவரான;

(ஆ) முறைப்பாட்டாளர், சாட்சிகள், காணாமற்போக்கப்பட்ட ஆளின் உறவினர்கள் அல்லது அவர்களின் சட்டத்தரணி அல்லது புலனாய்வில் பங்குபற்றும் ஆட்களைக் குறிவைத்து அழுத்தம் கொடுப்பதன் மூலம் அல்லது அச்சுறுத்தும் செயல் மூலம் புலனாய்வின் முன்னேற்றத்தின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றவரான;

(இ) அலுவலகமுறையான இடாப்புக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராகவிருந்துகொண்டு, எவரேனுமாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை வேண்டுமென்று பதியத் தவறுகின்றவரான அல்லது செம்மையற்றதென அவர் அறிந்திருந்த ஏதேனும் தகவலைப் பதிகின்றவரான;

(ஈ) ஆளொருவரின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமை பற்றிய தகவலை வழங்குகின்றமைக்கான சட்டத்தேவைப்பாடுகள் திருப்திசெய்யப்பட்டுள்ளனவென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவலை வழங்க மறுக்கின்றவரான, அல்லது செம்மையற்ற தகவலை வழங்குகின்றவரான,

இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவர் உட்பட எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர், மேல் நீதிமன்றத்தினாலான குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினாலும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அத்தகைய ஆள் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுவதற்கு இலக்காக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்குமிடத்து, மீள ஒப்படைக்கப்படுதலாகாது.

**18.** (1) ஆளெவரும் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுவதற்கு இலக்காக்கப்படக்கூடிய அபாயநேர்வு நிலவுவதாக நம்புவதற்குக் கணிசமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஆளை வேற்றரசுக்கு நாடுகடத்தல், திருப்பியனுப்புதல், சரணடைவித்தல் அல்லது மீள ஒப்படைத்தல் ஆகாது.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதுக்கள் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஏற்புடையற்பாலதானவிடத்து, சம்பந்தப்பட்ட அரசில் மனித உரிமைகள் பாரதூரமாக, வெளிப்படையாக அல்லது பாரியளவில் மீறப்படுகின்ற தொடர்ச்சியான போக்கு அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் இருக்கின்றமை உட்பட, இயைபான எல்லாக் கருத்தெடுப்புக்களும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஆளொருவர் எக்கட்டளைக்கற்களின் மீது வேறோர் அரசுக்கு நாடுகடத்தப்படலாமோ, திருப்பியனுப்பப்படலாமோ, சரணடைவிக்கப்படலாமோ அல்லது மீள ஒப்படைக்கப்பட லாமோ அக்கட்டளைக்கற்களை விதித்துரைக்கின்ற ஒழுங்கு விதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

*அந்தரங்கத் தன்மையும் தரவுப் பாதுகாப்பும்.*

**19**. இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்று தொடர்பாகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளில் தகவல்களைப் பயன் படுத்துவதற்கு அல்லது செப்பனீடுகளை பெற்றுக்கொள்வதற் கான உரிமையைப் பிரயோகிப்பதற்குப் பங்கமின்றி, காணாமற் போக்கப்பட்ட ஓர் ஆளுக்கான தேடுகைக் கட்டுக்கோப்பினுள் சேகரிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட மருத்துவ அத்துடன் மரபணுத் தரவுகளுக்குட்பட்ட தனிப்பட்ட தகவல்கள், அத்தகவல் கள் காணாமற்போக்கப்பட்ட ஆளைத் தேடுகின்ற நோக்கங்களைத் தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதலோ அல்லது கிடைக்கக்கூடியனவாக்கப்படுதலோ ஆகாதென்பது டன், ஆளொருவரின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங் களையும் அல்லது மதிப்பையும் மீறுகின்ற அல்லது மீறுகின்ற பயன்கொண்ட முறையில் சேகரிக்கப்படுதலோ, செய்முறைப் படுத்தப்படுதலோ, பயன்படுத்தப்படுதலோ அல்லது தேக்கி வைக்கப்படுதலோ ஆகாது.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்தல்.*

**20**. (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நீதிமுறை அல்லது வேறு பரிகரிப்புக்குப் பங்கமின்றி, நெறிமுறையான அக்கறையைக் கொண்டுள்ள எவரேனுமாள், இச்சட்டத்தின் 7, 14, 15, 16 அல்லது 19 ஆகிய பிரிவுகளை வலுவுறுத்துவதற்கு நாடி மேல் நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட மனு என்ற வகையாக விண்ணப்பிப்பதற்கும் அத்தகைய மனுவில் இறைஞ்சிக்கேட்கப்பட வேண்டியஅத்தகைய நிவாரணத்துக்காக அல்லது நிவர்த்திக்காக வழக்குரைப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நெறிமுறையான அக்கறை கொண்டுள்ள எவரேனுமாளி னால், விடயத்துக்கேற்ப, தாமாகவோ அல்லது அவரது சார்பில் வேறெவரேனும் ஆளினூடாகவோ இச்சட்டத்தின் 7, 14, 15, 16

அல்லது 19 ஆகிய பிரிவுகள் வலுவுறுத்தப்படாமை பற்றி விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆள் அறியவரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அவரினால் துணை நாடப்படலாம்.

(3) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மேல் நீதிமன்றம், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட மனுவொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கையின் எக்கட்டத்திலும் தோதானதென அது கருதுமிடத்து, விசாரணைக்காகவும் அறிக்கைக்காகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அத்தகைய கருமத்தை ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், அந்நோக்கத்துக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலத்தினுள் அதன் அறிக்கையை மேல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும்படி அத்தகைய ஆணைக்குழுவைக் கோரலாம்.

(4) மேல் நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட மனுவொன்றில் இறைஞ்சிக் கேட்கப்பட்ட நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது விடயத்தின் சூழ்நிலைகளில் அது நீதியானதும் ஒப்புரவானதுமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்பை விடுப்பதற்குத் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் மனுவில் மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய கட்டளை எத்தேதியன்று ஆக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஆறு வாரங்களினுள் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*அமைச்சர், வழிகாட்டு நெறிகளை அல்லது பணிப்புகளை வழங்குதல்.*

**21.** சமவாயத்தின்கீழான இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு முழுப் பயனும் கொடுப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய அளவுக்குச் சமவாயத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் பயனுற நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படக்

கூடியவாறான வழிகாட்டுநெறிகளை அல்லது அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அமைச்சர் காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

**22.** (1) இச்சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாட்டுக்குப் பங்கமின்றி, இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் அல்லது விதித்துரைக்கப்படும் ஏதேனும் கருமத்துக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத்தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு வரை விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப் படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்.

**23.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பயனுறுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக் கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு இருக்கும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**25.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய–

*பொருள்கோடல்.*

“பயனுறு அதிகாரமும் கட்டுப்பாடும்” என்பது, கீழ்நிலை அலுவலர்களுக்குக் கட்டளைகளை வழங்குவதற்கான தத்துவமும் அத்தகைய கட்டளைகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்கான ஆற்றலும் என்று பொருளாகும்;

“சுதந்திரம் இழப்பிக்கப்படுதல்” என்பது, ஆளொருவர் குறிப்பிடப்பட்டவோர் இடத்தில் அடைத்து வைக்கப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து அத்தகைய ஆளை அவ்வாறு அடைத்து வைத்தல் என்று பொருளாகும்;

“இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு” என்பது, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப் பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

“சட்ட வலுவுறுத்தல் அதிகாரி” என்பது, ஒரு பொலிசு அலுவலர் அல்லது ஒரு தவறு புரியப்பட்டமை பற்றிய புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகார மளிக்கப்பட்ட வேறெவரேனுமாள் அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

“இரகசியத் தடுப்பு” என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகார

மளிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடமாகவிராததும் அவ்வாள் இருக்குமிடம் அல்லது அவரது கதி அவரது உறவினர்களினால் அல்லது ஏனையோரினால் அறியப்படாதிருக்கின்றதுமானவோர் இடத்தில் ஆளொருவர் வைத் திருக்கப்படும் சூழ்நிலைகள் என்று பொருளாகும்;

''பலிக்குட்படுத்தப்பட்டவர்'' என்பது, காணாமற் போக்கப்பட்ட ஆள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலின் நேரடி விளைவாகத் தீங்குற்ற எவரேனும் தனியாள் என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்